# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1580 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

## பதவிகள் - வெற்றிடம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்**

### இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

உப பொலிஸ் பரிசோதகர் பதவி (விசேட அதிரடிப்படை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உப பொலிஸ் பரிசோதகர் (விசேட அதிரடிப் படை)" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2009.01.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.-ரூபா 1,90,200 - 7 x 2,160 - 2 x 2,880- 8 x 3,840 - 17 x 4,500 - ரூபா 3,18,300

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினப்படி:
- (1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200;
- (2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த படிகள்:
- (1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 12,000;
- (2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 4,000.
  - (அ) இலவச பயண வசதி ;
  - (ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்;
  - (இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்;
  - (ஈ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்;
  - (உ) கடமைக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதி யாக பணம் வழங்கப்படும்.
  - (ஊ) விசேட அதிரடிப்படை அடிப்படை பயிற்சியின் பின்பு விசேட அதிரப்படைப் பிரிவில் சேவை செய்யும் காலம் வரையும் அதில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக கொடுக்கப் படும் கொடுப்பனவு வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை :
- * வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத் தர்களுக்கும், பாதுகாப்பு உத்தியோ கத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசி திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

(ஆ) கல்வித் தகைமைகள் :
- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கும் போது விஞ்ஞான பாடஇலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பங்கள் விசேடமாக பரிசீலிக்கப்படும். (சான்றிதழ்கள் இருத்தல் அவசியம்) :-

அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒருவருடத்திற்கு குறையாத கால கணனி பாடநெறி உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பாடத்திட்டத்துடன்,

அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருவருடகால மின்னியல் பாடநெறியில் டிப்ளோமா பட்டத்துடன் அதே நிறுவனத்தில் குறைந்தது இருவருடகாலப் பிரயோகப் பயிற்சியும்,

தேசிய டிப்ளோமா பயிற்சிநெறியும் அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மோட்டார் தொழில்நுட்ப பயிற்சிநெறியும் அதே நிறுவனத்தில் மூன்றுவருட வேலை அனுபவமும்.

(இ) பௌதிக தகைமைகள் :

உயரம் : 5 அடி 6 அங். (ஆகக் குறைந்தது)

மார்பு : 32 அங். ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத்திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவ ராயின் தகைமை அற்றவராவர்.

(உ) பிற தகைமைகள் :

விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும் உடற்பயிற்சிகளில் பங்கு பற்றலாம். அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும் :

| | | |
|---|---|---|
| (1) | 1500 மீற்றர் | - 6 நிமிடங்கள் 20 விநாடிகள் |
| (2) | சிற்றம் (Situp) | - 30 விநாடியில் 15 தடவைகள் |
| (3) | டிப்ஸ் (Dips) | - 30 விநாடியில் 15 தடவைகள் |
| (4) | ஸ்கொட்ஸ் (Scott thrush) | - 30 விநாடியில் 20 தடவைகள் |

- பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் மாத்திரம் இறுதி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர் நேர்முக பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்ப வர்கள் மாத்திரம் எழுத்து பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
- எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளது :
  - * 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறை யாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்;
  - * பொது அறிவும் பொது நுட்பமும் (01 மணித் தியாலம்.)

6. **வைத்திய பரீட்சை :**
- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணை**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல்கள் கொடுப்பது அவரை ஆட் சேர்ப்பதற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின்பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**
- பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதி பொது நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தினதும் பிரகாரம் அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப் படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
- நியமன தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியத் திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத் தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியற்றவர் என கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி உடையதன் 41 ஆம் இலக்கமும் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியினுடைய பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும் சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத் தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர்நிலை உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர்நிலை உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, திசெம்பர் 19 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, திசெம்பர் 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அழுத்தகரினால் பிரசுரிக்கப்பட்டது.

(ஒ) தகுதிகூர்நிலை உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) ஏலவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"X8" அளவுத் தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர் களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பக் காரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

ஜயந்த விக்ரமரத்ன,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

உபபொலிஸ் பரிசோதகர் பதவி (விசேட அதிரடிப்படை)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும், தேர்தல் மாவட்டமும் : -----.

6. (அ) தேசிய இனம் :-----.
(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----
(இ) வம்சாவழி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-
(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரின்தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரரின் வயது :-
(விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :
ஆண்டுகள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள் /தகைமைகள் உண்டா ? :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் ஏதேனும் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக. :-----.
(அ) -----.
(ஆ) -----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வாறாயின்) இது தொடர் பான விபரங்களைத் தருக :-----.
(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக? : -----.

16. (அ) தற்போதைக்கு படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைத்தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப் பத்தை அனுப்ப வேண்டும்.
(ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

17. படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் :-----.

18. நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றி யுள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக :-----.

19. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப் பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட் டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் வெளிப்படுத்து கின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை யென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

..................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

12-384

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2007**

கல்வி அமைச்சின் கீழ்க்காணப்படும் இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவி வெற்றிடத்திற்காக சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் தகைமை கொண்டோரை தேர்ந்தெடுப் பதற்கான போட்டிப் பரீட்சை அரச சேவை ஆணைக்குழு சபை சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பின் 284 வெற்றிடங்களை நிரப்ப அரச சேவை ஆணைக்குழு சபையினால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

2. **பரீட்சையின் திகதி மற்றும் இடம்**.- இப்பரீட்சை 2009, மார்ச் மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சையை ஒத்திவைக்க அல்லது இரத்துச் செய்ய அரச சேவை ஆணைக்குழு சபைக்கு அதிகாரம் உண்டு.

3. **ஊழியர் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலாகும் திகதி**.- ஊழியர் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலாகும் திகதி அரசசேவை ஆணைக்குழு சபையினால் தீர்மானிக்கப்படும். ஏதாவதொரு வெற்றிட எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்ப அல்லது நிரப்பாதிருப்பதற்கான அதிகாரம் அரச சேவை ஆணைக்குழு சபைக்கு உண்டு.

4. **சேவை நிபந்தனை மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2002.03.01 ஆந் திகதிய 1255/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவையின் பிரமாணக் குறிப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் அப்பிரம ாணக் குறிப்பின் மீது பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப் புகளுக்கும் அரச சேவை யின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனை களுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சேவையின் III வகுப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ii) சேவைக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் சேவையின் தேவையின் அடிப்படையில் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்ற கட்டுப்பட வேண்டும்.

(iii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தும் கொண்டது. விதவைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் உதவுதொகைக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். இந்நியமனம் ஒரு வருடத்திற்கு பதிற்கடமை அடிப்படையிலாகும்.

5. **வருடாந்த சம்பள அளவுத்திட்டம்**.- III ஆம் வகுப்பு.- ரூ. 2,75,220- 10×7,740 - 8×9,480 - 17×12,600 - ரூ. 6,42,660 ஆகும். (ரூ. 2,98,440 இற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் மற்றும் ரூ. 3,21,660 இற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை).

6. **தகைமைகள்**.- இவ் வாசகத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளின் ஒழுங்கு விதிகளுக்கமைய கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்ட தற்பொழுது சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் நியமிப்பதற்கான பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவர் :-

(i) இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 03 ஆண்டுகாலம் சேவையாற்றியுள்ள மற்றும் அச்சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.

(ii) 03 வருட சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது 2005.07.01 ஆந் திகதி தொடக்கம் ;

(iii) சகல விண்ணப்பதாரர்களும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**குறிப்பு**.-2009.01.05 ஆந் திகதிக்கு அண்மித்த 05 வருடங்களுக்குள் அனைத்து சம்பள அதிகரிப்புகளும் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அக்காலத்திற்குள் ஒழுக்காற்று தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) உட்படாத உத்தியோகத்தர் மாத்திரம் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டவர் என்று கருத்திற் கொள்ளப்படும். விண்ணப்பம் கோரும் இறுதித் தினம் அன்று கடமையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமையற்றவர் ஆகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவுக் கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி பரீட்சார்த்தி விண்ணப்பப் படிவங்களைத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் 1-3 வரை முதலாம் பக்கத்திலும் 4-9 வரை 2 ஆவது பக்கத்திலும் எஞ்சியதை 3 ஆம் பக்கத்திலுமாக தமது கையெழுத்தின் மூலம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்த லின்றி நிராகரிக்கப்படும். தமது விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததாக இருக்க வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும் ;

(ii) பரீட்சார்த்தி பரீட்சைகளுக்குத் தோற்றும் மொழியில் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இருப்பினும் விண்ணப்பப்படிவத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது பகுதிகளின் உப பிரிவுகளை ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில் நிரப்ப வேண்டும். மொழி மூலத்தை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

(iii) விண்ணப்பப்படிவம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு 2009.01.05 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கக்கூடியவாறு அதற்கு முன்னர் தாம் அடங்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விச் செயலாளருக்கு பொறுப்பளிக்க வேண்டும். (பரீட்சார்த்தியின் சொந்த ஆவணங்களை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது அவசியம் என்பதனால்) ;

(iv) கல்வி அமைச்சு அல்லது அரசசேவை ஆணைக்குழு சபை அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப் படும் ;

(v) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதித்துக் கிடைத்தல் தொடர்பாக எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(vi) விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரர் களுக்கு அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாதிருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் முறைக்கு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் நிதி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதியையும் பதிவு செய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியேயாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்ட விபரங்களை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்குவது பொருத்தமானதாகும் :-

(i) பரீட்சையின் பெயர் :
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :
(iii) முகவரி :
(iv) விண்ணப்பப்படிவம் வலய/மாகாணக் கல்வி அலுவலகங் களுக்கு தபாலிலிட்ட திகதி மற்றும் பதிவு இலக்கம் உட்பட தபால் அலுவலகம்.

இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 250 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டின் எந்தப் பிரதேசத்திலேனும் உள்ள பிரதேச செயலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்ட வேண்டும். மேலும் அதன் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக இருப்பதுடன் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறொரு பரீட்சைக்காக மாற்றவோ அல்லது திருப்பிச் செலுத்தவோ படமாட்டாது.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட்டுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி மண்டபப் பொறுப்பாளருக்கு தமது ஒப்பத்தை உறுதி செய்த அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தியை பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் விடுக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். அவ்வாறான சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்பட வேண்டியேற்படும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டிருப்பது பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்தி செய்தவர் என்பதனை ஏற்றுக்கொண்டல்ல என்பதனையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் ஆளடையாளம் .-பரீட்சை மத்திய நிலையத்தின் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடியவாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட அடையாள அட்டையில் ஏதாவதொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;

9. **போலித்தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தச் சந்தர்ப்பத்திலேனும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்தை இரத்துச் செய்ய முடிகிறது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் போலியானது என பதவிக்குத் தேர்ந்தெடுத்ததன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதாவதொரு முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்றை மறைத்திருப்பின் சேவையிலிருந்து நீக்க சந்தர்ப்பம் உண்டு.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவதொரு விடய மிருப்பின் அது குறித்து இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழு சபையினால் எடுக்கப்படும்.

11. **மொழி மூலம்**.- (அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றவேண்டியது அரச சேவையில் இணைந்துகொள்வதற்காக தகைமைபெற்ற பரீட்சை/நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலமாக இருக்க வேண்டும்;

(இ) விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பின்னர் மாற்றியமைக்க விண்ணப்பதாரர்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. **தேர்ந்தெடுக்கும் முறை**.- சிரேஷ்ட மற்றும் பொது உளச்சார்பு பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளை அடிப்படை யாகக் கொண்டு தகைமைத் தொடருக்கமைய அடிப்படைத் தகைமை களைப் பரிசீலனைசெய்து நியமனத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படும்.

| | | புள்ளிகள் |
|---|---|---|
| சிரேஷ்ட தரத்திற்காக - | (உயர்ந்த பட்சம்) | 100 |
| நுண்ணறிவுப் பரீட்சைக்காக (01 மணித்தியாலம்) - | (உயர்ந்த பட்சம்) | 50 |
| மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை - | | 150 |

(i) சிரேஷ்ட தரம் : பதவிக்கு விண்ணப்பிப்பதற்காகத் தேவையானதென 07 வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச சேவைக்காலமான 03 வருடங்களைத் தவிர அத்தரத்தில் எஞ்சிய திருப்திகரமான செயற்றிறன் மிக்க சேவைக்காலம் சிரேஷ்ட தரத்திற்காக புள்ளி வழங்க கணிப்பீடு செய்யப்படும்.

**குறிப்பு**.- 1985.01.01 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் III ஆம் வகுப்புக்கு பெயரளவில் நியமிக்கப்பட்ட மற்றும் அத்தினத்தை அடிப்படையாகக் கொண்டு அச்சேவை யின் முதலாம் வகுப்பிற்கு 1985.01.01 ஆந் திகதியன்று உள்ளீர்ப்புச்

செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அத்தினத்தை அடிப்படையாகக் கொண்டு முதலாம் வகுப்பின் சேவைக் காலத்திற்காக புள்ளி வழங்கப்படாது என்பதுடன் அச்சேவையின் III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ள தினத்தைக் கருத்திற்கொண்டு அதனடிப் படையில் அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக நிவர்த்தி செய்யவேண்டிய குறைந்தபட்ச சேவைக்காலத்தை குறைத்ததன் பின்னர் எஞ்சிய முதலாம் வகுப்பின் சேவைக்காலம் இங்கு 6-i இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச சேவைக்காலத்தை தவிர எஞ்சிய சேவைக்காலத்திற்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும். ஒரு வருடத்திற்கு 08 புள்ளிகள் வீதம் உரித்தாகுவதுடன் ஒரு வருடத்தைக் குறைந்த சேவைக் காலத்திற்காக 03 மாதங்களுக்கு 02 புள்ளிகள் வீதம் உயர்ந்த பட்சம் 100 புள்ளிகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) நுண்ணறிவுப் பரீட்சை.- பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் வழங்கப்படும் ஒரு மணித்தியால வினாத்தாள் இதற்காக வழங்கப்படும். கல்வியின் விழுமியங்கள் மற்றும் கல்வியின் எதிர்பார்ப்பும் பயன்பாடுகள் தொடர்பான செயற்பாடுகள், பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்கள் உட்பட அமைப்புகளுக்கு தேவைப்படும் ஊழியர் எண்ணிக்கையின் மூலம் உயர்ந்தபட்சப் பயன்பாடு கிடைக்கக்கூடியவாறு கேள்விகள் உள்ளடங்கியுள்ளன.

13. **தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்.**- (i) சிரேஷ்ட மற்றும் தகைமைகள் அடிப்படையிலான பரீட்சைக்காகப் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்பத் தேவைப்படும் வெற்றிட அளவுகளுக்கு உரியதான எண்ணிக்கைக்கு மாத்திரம் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான பரீட்சைக்கு அழைக்கப் படும்.

(ii) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட ஏதாவதொரு பரீட்சார்த்தி அல்லது பரீட்சார்த்திகள் உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதிருப்பின் ஏதாவதொரு வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் தகைமைத் தொடருக்கமைவான பட்டியலில் அடுத்த பரீட்சார்த்தியின் மூலம் அவ்வெற்றிடம் நிரப்பப்படும் ;

(iii) சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் ஒருவரை விட அதிகமாக இருப்பின் அது தொடர்பாக அரச சேவை ஆணைக்குழு சபையினால் இறுதித் தீர்மானமெடுக்கப்படும்.

(iv) நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சார்த்தியின் தகைமைகள் பரிசீலனை செய்யப்படுவதுடன் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

அரச சேவை ஆணைக்குழு சபையின் உத்தரவின் பிரகாரம்,

எம். எம். என். டி. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பெலவத்தை,
பத்தரமுல்லை.

அலுவலக உபயோகத்திற்காக மட்டும்

**சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2007**

Competitive Examination for recruitment to Class III of Sri Lanka Educational Administrative Service on seniority and merit-2007

பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)
(அறிவித்தலின் 11 ஆவது பந்தியைப் பார்க்கவும்)

1. (i) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத் துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) உ+ம் : ANANDA, A.C.
(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.
(iii) முழுப்பெயர் (ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்) :----.

2. (i) தற்போது கடமையாற்றும் இடமும் காரியாலயத்தின் முகவரியும் : ----.
(ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்) :
(ii) தனிப்பட்ட முகவரி :----.
(ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்) :----.
(iii) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்) :----.

3. (i) பால் :-
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)
(ii) இன வகை : (சிங்களவர் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் -3, முஸ்லிம் -4, ஏனையோர் - 5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)
(iii) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

4. (i) பிறந்த திகதி :-
ஆண்டு : மாதம் : திகதி :
(ii) 2009.01.05 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

(iii) விவாகமானவரா/விவாகமாகாதவரா ?
(விவாகமாகாதவர் -1, விவாகமானவர் - 2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

5. சேவை விபரம்:
(i) முதல் நியமனப் பதவியும் திகதியும் :-----.
(ii) தற்போது நீர் உள்ளடங்கும் மாகாண கல்வித் திணைக் களம்/வலயக் கல்வி அலுவலகம் :-----.
(iii) அதிபர் I தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
6. கல்வித் தகைமை :-----.
7. தொழில் தகைமை :-----.
8. பங்குபற்றியுள்ள பயிற்சிப் பாடநெறி தொடர்பான விபரம் :----.
9. 2009.01.05 ஆந் திகதிக்கு அண்மித்த 05 வருடங்களுக்குள் குற்றம் ஒன்றுக்கு எவ்வாறான (எச்சரிக்கை தவிர) தண்டனை தொடர் பான விபரம் :-----.
10. (i) 2009.01.05 ஆந் திகதிக்கு அண்மித்த 05 வருடங்களுக்கு சகல சம்பள அதிகரிப்புக்களையும் பெற்றுள்ளீரா ? :----.
(ii) பெறாதிருப்பின் அதற்கான காரணம் :-----.
11. தங்களுக்கெதிராக தற்பொழுது ஏதாவதொரு ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெறுவதாயின் அதன் தற்போதைய நிலைமை ? :-----.
12. கடந்த 05 வருடங்களுக்குள் சம்பளமற்ற அல்லது அரைச் சம்பள விடுமுறை பெற்றிருப்பின் அது தொடர்பான விபரம் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய இலங்கைக் கல்வி நிருவாக சேவைக்கு சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதற்காக கருத்திற் கொள்ள நான் தகைமை கொண்டவர் என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது என்றும் மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்தால் உறுதி செய்கிறேன்.

.............,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

செயலாளர்,
அரச சேவை ஆணைக்குழு சபை.

மேற்கூறப்பட்ட 05 தொடக்கம் 12 வரை குறிப்பிடப்பட்டுள்ள சேவை விபரங்கள் சொந்த ஆவணங்களுக்கமைய சரியானதென உறுதி செய்வதுடன் மேலும் பரீட்சைக் கட்டணமான ரூ. 250 செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதி செய்கிறேன்.

.............,
வலய க.ப./மாகாண க.ப./மாகாண செயலாளர், கல்வி.

திகதி :-----.

பரீட்சைக் கட்டணத்தை எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

12-325

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

**பொலிஸ் திணைக்களம்**

குருநாகல் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம்

பாவனைக்கு பொருந்தாத பொருட்கள் ஏலத்தில் விற்பனை

குருநாகல் பொலிஸ்பகுதியின் பொலிஸ் நிலையங்களில் ஒதுக்கப்படும் பாவனைக்கு பொருந்தாத பொருட்கள் பிரதான ஏலத்தில் 2008.12.27 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு குருநாகல் பொலிஸ் நிலைய வளவில் நடைபெறும் அப்பொருட்களை பரீட்சித்துப்பார்க்க 2008.12.26 ஆந் திகதி பி. ப. 1.00 மணி தொடக்கம் பி. ப. 4.00 மணிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஏலம் நடைபெறும் இடத்துக்கு உள்ளே வரும் சகல நபர்களும் தமது அடையாளத்தை உறுதி செய்யும் முகமாக தேசிய அடையாள அட்டையையோ பாஸ்போட்டையோ முன்வைத்தல் வேண்டும்.

ஏலத்தில் விடப்படும் பொருட்கள் விலை கொடுத்து வாங்கும்போது உடனே அதற்குரிய விலையை செலுத்தி அதற்குரிய ரசீதை பெற்றுக்கொள்வதோடு அப்பொருட்களை 2008.12.27 ஆந் திகதி மாலை 15.30 மணிக்கு முன் எடுத்துச் செல்லுதல் வேண்டும். அன்றைய தினத்தில் எடுத்துச் செல்லாத எந்தப் பொறுப்பும் சொல்லப் படமாட்டாது.

ஏலத்தில் பொருட்களை முன்வைத்தல் ஆகக்குறைந்த கேள்விவிலை ஏலத்தில் விட்டு விற்பனை செய்தல் பொருட்களை ஒதுக்குதல் போன்ற சகல தீர்மானங்களும் ஏலக்குழு மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

எல். எம். தயானந்த பண்டார,
சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்,
குருநாகல் பிரிவு.

**பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படவுள்ள பொருட் களும் அவை சார்ந்த அளவுகளும்**

| | பொருட்கள் | ஏலவிற்பனை |
|---|---|---|
| 1. | முள்ளு | - 03 |
| 2. | இரும்புக்கட்டில் | - 87 |
| 3. | இரட்டை இரும்புக்கட்டில் | - 62 |
| 4. | கை முள்ளு | - 02 |
| 5. | பெரிய வாளி | - 05 |
| 6. | சிறிய வாளி | - 03 |
| 7. | கெல்வனைஸ் குப்பைவாளி | - 01 |
| 8. | தொலைக்காட்சி | - 02 |
| 9. | வாள் | - 04 |
| 10. | சிவிலிங் மின் விசிறி | - 13 |
| 11. | அலவாங்கு | - 05 |
| 12. | மண்வெட்டி | - 23 |
| 13. | ரெக்ஸின் கதிரை | - 26 |
| 14. | தீயணைக்கும் இயந்திரம் | - 07 |
| 15. | மல்டி பொட் | - 06 |
| 16. | தட்டச்சு இயந்திரம் - சிங்களம் | - 13 |
| 17. | பைல் கபட் | - 02 |
| 18. | குஷன் இரும்புக்கதிரை | - 77 |
| 19. | வீச்சு கத்தி | - 02 |
| 20. | பெற்றோல் இலாம்பு | - 02 |
| 21. | மின் கேத்தல் | - 22 |
| 22. | வாயு அடுப்பு | - 01 |
| 23. | கோடரி | - 03 |
| 24. | மேசை மின் விசிறி | - 07 |
| 25. | தட்டச்சு - ஆங்கிலம் | - 06 |
| 26. | வெற்று பெரிய தகரப்பேணி | - 02 |
| 27. | துருவலகு | - 01 |
| 28. | இரும்பு பார் | - 04 |
| 29. | புல்வெட்டும் இயந்திரம் | - 01 |
| 30. | பலகை அலுமாரி | - 01 |
| 31. | இரும்பு கபட் | - 07 |
| 32. | கல்தேரம் | - 16 |
| 33. | ஸாஸ் பானை | - 32 |
| 34. | அலுமினியக் கேத்தல் | - 11 |
| 35. | அலுமினியக் கோப்பை (சிறியது/பெரியது) | - 12 |
| 36. | ஸாஸ் பானை (பெரியது) | - 07 |
| 37. | பூட்டு/சாவி | - 03 |
| 38. | மின் பிறப்பாக்கி இயந்திரம் | - 01 |
| 39. | நீர் இயந்திரம் | - 08 |
| 40. | ஒலிப்பதிவு நாடா | - 04 |
| 41. | வெட்டுக்கத்தி | - 02 |
| 42. | வாகன பரிசோதனைக் கண்ணாடி | - 01 |
| 43. | சங்கிலி வாள் | - 01 |
| 44. | நீர் சூடாக்கி (பொய்லர்) | - 15 |
| 45. | சைக்கிள் | - 14 |
| 46. | அலுமினியப் பீங்கான் | - 02 |
| 47. | வாளி | - 09 |
| 48. | மின் விசிறி | - 11 |
| 49. | நிழற்பிரதி இயந்திரம் | - 02 |
| 50. | ஹெலஜன் மின்குமிழ் | - 02 |
| 51. | பூங்கா கத்திரிக்கோல் | - 01 |
| 52. | தள மினுக்கி | - 01 |
| 53. | தண்ணீர் (பில்டர்) | - 19 |
| 54. | தொலை நகல் இயந்திரம் | - 01 |
| 55. | ரோனியோ இயந்திரம் | - 01 |
| 56. | சைக்கிள் மணி | - 04 |
| 57. | சைக்கிள் லக்கேஜ் | - 04 |
| 58. | சைக்கிள் சாவி | - 04 |
| 59. | ஆயுதமற்ற சங்கிலி | - 01 |
| 60. | அலுமினியக் குடம் | - 02 |
| 61. | சைக்கிள் டைனமோ | - 08 |
| 62. | சைக்கள் பம்பி | - 03 |

12-315

---

**உரிமை கோரப்படாத அஞ்சல் பொருட்களில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை**

உரிமை கோரப்படாத அஞ்சல் பொருட்களில் இருந்து கண்டெடுக் கப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள புதிய மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் உள்ள மீண்ட கடித அலுவலகத்தில் 2008 திசெம்பர் 23 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

நியாயமான விலை கோரப்படாத எப் பொருட்களும் விற்பனை யிலிருந்து நிறுத்தி வைக்கப்படும். உயர்ந்த விலையைக் குறித்து வெற்றி பெறும் கேள்வியாளர் அத்தொகையை உடனடியாக காசாக செலுத்தி அலுவலக நேரம் முடிவடைவதற்கு முன்னராக பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். காரியாலய வேலை முடியுமுன்னராக அப்பொருட்களை எடுத்துச் செல்லா விட்டால் அதற்குரிய பாதுகாப்பு பொறுப்பினை திணைக்களம் ஏற்றுக்கொள்ளாது.

ஏலவிற்பனை தொடர்பான விடயமேதும் சம்பந்தமான அஞ்சல் அதிபதியினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாகும். ஏலவிற்பனவில் விடப்பட்ட பொருட்களை முன் அறிவித்தலின்றி விற்பனையில் இருந்து நிறுத்துவதற்கு அஞ்சல் அதிபதிக்கு உரிமை உண்டு.

கண்காணிப்பாளர்,
மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம்,
அஞ்சல் மா அதிபதிக்காக

அஞ்சல் திணைக்களம்,
அஞ்சல் மா தலைமை அலுவலகம் ,
கொழும்பு 10
25.11.2008

| | பொருட்கள் | ஏலவிற்பனை |
|---|---|---|
| 1. | பாவித்த உடைகள் | - 45 |
| 2. | சாரி | - 6 |
| 3. | சல்வாரி | - 7 |
| 4. | வளையல் செட் | - 15 |
| | கவரின் நகைகள் | - 10 |
| 5. | பாவித்த உடைகள் | - 15 |
| | பாவித்த பை | - 1 |
| 6. | சின்ன சி. டி. பிளேயர் | - 1 |
| 7. | சென்சிட்டி டிவைஸ் | - 1 |
| 8. | சிறுவர் சட்டைகள் | - 6 |
| | சிறுவர் சேட் | - 7 |
| 9. | ஸ்கேட் | - 2 |
| | பிளவுஸ் | - 4 |
| | சேட் | - 1 |
| 10. | கவுன் | - 9 |
| 11. | ரிசேட் | - 3 |
| | பெண் உடை | - 1 |
| | அலங்கார பென்சில் செட் | - 1 |
| | கொண்டை கிளிப் | - 7 |
| | துணி துண்டுகள் | - 2 |
| 12. | பேபி சூட் | - 3 |
| | பென்சில் பெகட் | - 2 |
| | ஸ்டிக்கர் காட் | - 9 |
| 13. | பொட்டோ பிறின்ட் பேப்பர் (Kodak) - 8 kg. | |
| 14. | சாரி | - 1 |
| | ஸ்கேட் | - 1 |
| | கவுன் | - 2 |
| | ரிசேட் | - 1 |
| | சல்வாரி | - 2 |
| | உள் ஆடை | - 2 |
| | பிறா | - 2 |
| 15. | Exchage climate 5cens Ht 68 Flex 24D | - 1 |
| 16. | வர்ண துணிதுண்டுகள் | - 36 |
| 17. | பாடசாலை உபகரணப் பெட்டி | - 1 |
| | பென்சில் பெட்டி | - 4 |
| | பாடசாலை வை | - 1 |
| | விளையாட்டு சாமான்கள் | - 3 |
| 18. | சாரி | - 2 |
| 19. | கம்யூட்டர் கீ போட் HP | - 1 |
| | மௌஸ் USP யவ | - 1 |
| 20. | பாவித்த உடைகள் | - 33 |
| | பை | - 2 |
| 21. | பித்தளை செம்பு | - 1 |
| | சின்ன விளக்கு | - 2 |
| | கரண்டி | - 1 |
| | தட்டு | - 1 |
| | சின்ன செம்பு | - 2 |
| 22. | கைகுட்டைகள் | - 20 |
| | குழந்தை உடுப்புகள் | - 8 |
| | தொப்பி | - 1 |
| | சின்ன ரி சேட் | - 2 |
| | பொம்மைகள் | - 2 |
| | பென்சில் | - 1 |
| | கதைப்புத்தகம் | - 3 |

| | பொருட்கள் | ஏலவிற்பனை |
|---|---|---|
| 23. | குழந்தை உடுப்புக்கள் | - 3 |
| | ஸ்கேட் | - 1 |
| | பிளவுஸ் | - 1 |
| | காற்சட்டை | - 4 |
| | பிறா | - 1 |
| 24. | பெண்டேஜ் ரோல் (பெரியது) | - 07 |
| 25. | கிரிக்கட் மட்டை (மென்பந்து) | - 3 |
| 26. | லெதர் பை (பாவித்தது) | - 4 |
| | ஹறா பை | - 6 |
| | காபட் | - 2 |
| 27. | சிற்பவேலை (பாவித்தது) | - 01 |
| 28. | காற்சட்டை | - 5 |
| | ரி சேட் | - 5 |
| 29. | கைக்கடிகாரம் | - 1 |
| | ஜிலட் ரேசர் செட் | - 1 |
| 30. | டூல் | - 2 |
| | பிளாஸ்டிக் கனேக்டர் | - 5 |
| | டயர் ரோல் | - 1 |
| 31. | லெதர் கதிரை | - 01 |
| 32. | டி. வி. டி. | - 7 |
| | U. M. D. | -3 |
| | D. V. D. | - 2 |
| | D.V. D. - | 5 |
| | D.V. D. செட் | - 5 |
| | ஓடியோ C. D. | - 2 |
| 33. | D.V. D. தமிழ் | - 400 |
| 34. | பேசரி சிலியட் பெகட் | - 4 |
| | செதரிமட் பெகட் | - 23 |
| 35. | ஜபமாலை பெகட் | - 33 |
| | மெழுகுதிரி | - 02 |
| 36. | டோய்ஸ் | - 6 |
| | புல்லாங்குழல் | - 1 |
| | சோக் பெட்டி | - 1 |
| | பெஸ்டரி குச்சி பெகட் | - 1 |
| | பெகட் | - 1 |
| | வேலை புத்தகம் | - 0 2 |
| 37. | Under water camera (நீருக்கு அடியில் பாவிக்கும் கமரா) | - 1 |
| 38. | பொம்மை | -1 |
| | விளையாட்டு கார் | - 3 |
| | விளையாட்டு மிருகம் | - 2 |
| | பேனை பெகட்ட | -1 |
| | புத்தகம் | - 7 |
| 39. | ரி . சேட் | - 2 |
| | கவுன் | - 1 |
| | இரவு உடுப்பு | -1 |
| | பெல் பென் பெகட் | - 1 |
| | குழந்தை உடுப்பு | - 1 |
| 40. | பென்டேஜ் ரோல் (சிறிது) | - 50 |
| | பம்ஸ் | - 01 |
| 41. | பாவித்த உடைகள் | 01 தொகுதி |
| | துணி துண்டு ஷாம்பல்ஸ் | - 01 |
| 42. | பவர் பிளேயர் யுனிட் | - 01 |
| 43. | ஜெகட் | - 1 |
| | சுவீட்டர் | - 3 |
| 44. | ரி. சேட் | - 3 |
| | ஸ்கேட் | - 2 |
| | பேபிசூட் | - 5 |
| | உள்ளாடை | - 3 |
| | பாவாடை | - 1 |
| 45. | சப்பாத்து | - 2 |
| | காற்சட்டை (பெண்) | - 3 |
| | ரி. சேட் | - 9 |
| | பிளவுஸ் | - 5 |
| | பென்சில் பெட்டி | - 1 |
| | உள்ளாடை | - 7 |
| | வெஸ்ட் | - 3 |
| | மேசை விரிப்பு | - 1 |
| 46. | வரைபடம் | - 4 |
| | கென்வஸ் பெயின்ட் | - 1 |
| 47. | அச்சிடப்பட்ட கதைப்புத்தகம் (ஆங்கிலம்) | - 45 |
| 48. | பொம்மை | - 10 |
| | குழந்தை துணிகள் | - 4 |
| | பிஸ்சிங் செட் | - 1 |
| | சிறுவர் கடிகாரம் | - 1 |
| 49. | கைக்கடிகாரம் 1 (Fanatic) | - |
| | நகை செட் | - 1 |
| | சல்வாரி | - 1 |
| | பிளவுஸ் | - 5 |
| 50. | குழந்தை புத்தகங்கள் (தமிழ்) | - 117 |
| 51. | பாவித்த உடைகள் | - 17 |
| | பாவித்த கவுன் | - 01 |
| | சப்பாத்து (பெண்) | - 03 |
| 52. | சலட் கடிகாரம் | - 1 |
| | 2 GB புத்தகம் | - 1 |
| | கணனி புத்தகம் | - 2 |
| 53. | கிறிஸ்தவ சமய புத்தகம் | - 12 |
| 54. | விளையாட்டு பொருட்கள் | - 2 |
| | படப் பிறேம் | - 1 |
| | டவல் | - 1 |
| | கவரிங் நகைப்பெட்டி | - 01 |
| | கொண்டை கிளிப் | - 4 |
| | மின்னுங்கள் பெகட் | - 18 |
| | விளையாட்டு பொருட்கள் | - 01 தொகுதி |
| 56. | சல்வாரி | - 2 |
| | ரிசேட் | - 2 |
| | சின்ன சேட் | - 1 |
| | கவுன் | - 1 |
| | சாரி | - 1 |
| | டி - சேட் | - 2 |
| 57. | தலையணி உறை | - 4 |
| | ஜன்னல்துணி | - 1 |
| 58. | ஸ்கேட்ஸ் | - 4 |
| | பிளவுஸ் | - 6 |
| | உள்ளாடைகள் | - 8 |
| | கவுன் | - 2 |
| | கை பை | - 2 |
| 59. | பேபி சூட் | - 13 |
| 60. | பாவித்த உடைகள் | - 44 |
| 61. | விளையாட்டு வீரர் சப்பாத்துக்கள் 18 சோடி | |
| 62. | சாரி | - 7 |
| 63. | வெஸ்ட் | - 2 |
| | பிளவுஸ் | - 2 |
| | ஸ்கேட் | - 1 |
| | ரிசேட் | - 3 |
| | காற்சட்டை (பெண்) | - 1 |
| 64. | குழந்தை நீள் காற்சட்டை | - 2 |
| | கவுன் | - 1 |
| | பிளவுஸ் | - 1 |
| | ரி- சேட் | - 3 |
| | பிறா | - 3 |
| 65. | கிறிஸ்மஸ் அலங்கார பொருட்கள் | - 1 தொகுதி |
| 66. | பாவித்த சப்பாத்து | - 3 |
| | பாவித்த உடைகள் | - 24 |
| 67. | ரொட்றி சைக்கிள் | - 01 |
| 68. | யாட் காட் செட் | - 1 |
| | இலேக்ரோனிக் பிஸ்ட் ரிபிளேசர் | |
| 69. | பெண்டிஸ் செட் | - 1 |
| | பென்சில் பெட்டி | - 1 |
| | பேபி பிளவுஸ் | - 5 |
| | Small Key boards | - 1 |
| | டோலி | - 1 |
| 70. | போலோநைட் கமரா | - 1 |
| 71. | சின்ன கவுன் | - 4 |
| | விளையாட்டு பொருட்கள் | - 1 |
| | விளையாட்டு கரடி | - 2 |
| | விளையாட்டு பொருள் | - 1 |
| | பவுல் செட் | - 2 |
| 72. | ஸ்டாட்டர் மோட்டார் சொலநைட் | - 1 |
| | ஆல்ட்டநேட்டா பெல்ட் (றப்பர்) | - 2 |
| | மோடரி டெம்ரைச்சர் | - 3 |
| 73. | பேபி சூட் | - 2 |
| | பாவாடை பிளவுஸ் | - 1 |
| | ரிசேட் | - 2 |
| | பிறா | - 3 |
| | குழந்தை உள்ளாடை | - 6 |
| | உள்ளாடை | - 4 |
| 74. | டிஜிடல் கமரா (பாவித்தது) Power Shot (A) - 200 (Cannon) | - 01 |
| 75. | பென்சில் பெட்டி | - 1 |
| | விளையாட்டு பொருள் | - 1 |
| | பொம்மை | - 4 |
| | கைக்கடியாரம் (பெண்) | - 1 |
| | ஒனமன்ட் | - 1 |
| | Design புத்தகம் | - 1 |
| | விஞ்ஞான புத்தகம் | - 1 |
| 76. | மேக் அப் செட் | - 1 |
| | க்ளாஷ் பிளேட் | - 2 |
| 77. | புத்தகங்கள் | - 10 |
| | மருத்துவ புத்தகங்கள் | - 3 |
| | இயந்திர பொறியியல் புத்தகம் | - 2 |
| 78. | அன்டனா டிஸ்க் பிரேன்சர் | - 500 |
| 79. | றப்பர் பில்ட் | - 8 |
| | சென் சோ ஓயில் போத்தில் | - 01 |
| | வெக்ஷ் டின் | - 1 |
| 80. | பாவித்த உடைகள் | - 29 |
| 81. | ஹெயார் டைய் பெகட் | - 4 |
| 82. | சமையல் அறை உபகரணம் | |
| | வெற்று பிளாஸ்டிக் கேன் | - 1 |
| 83. | விளையாட்டு உபகரணங்கள் | |
| | கையுறை | - 17 |
| | கையுறை (சின்ன) | - 06 |
| | தலைகவசம் | - 06 |
| 84. | விளையாட்டு உபகரணங்கள் | |
| | சப்பாத்து | - 4 |
| | கையுறை | - 7 |
| | ஸ்பிக் றொட் | - 6 |
| 85. | யுக்கி மெசின் உதிரிப்பாகம் | - 15 பெகட் |
| 86. | யுக்கி மெசின் உதிரிப்பாகம் | - 36 |
| 37. | சேகிட போட் | - 25 |
| | ஹீட்டர் | - 02 |
| 88. | கொப்பிங் மெசின் உதிரிபாகங்கள் | -139 பெகட் |
| 39. | பொத்தான் ஷாம்பல்காட் | - 10 |
| | தோல்பட்டை பாதுகாப்பு கவசம் | - 08 |
| 90. | தொலைபேசி லைன் கோட் | 1 தொகுதி |
| 91. | பிளாஸ்டிக் கப் | - 350 |
| | இரும்பு பிறேம் | - 4 |
| 92. | ஜெக் | - 49 |
| | கெனக்டர் | - 01 |
| 93. | PVC சோகட் | - 48 |
| 94. | காட்றிச் டூல் பெகட்ட | - 15 |
| 95. | வைத்திய பெட்டி | - 01 |
| | மைக்கிரோ சுவிச் (3100.00) | -01 |
| 96. | அனிமேடட் லைட் சோ பேண் | - 1 |
| | டுவய்ஸ் என்ட் புட் மல்டி பிளேஷன் | - 01 |
| | ஸ்டா ரெக் லெயன் | - 1 |
| 97. | தரிமல் பிரின்டட் ரிபன் சென்சர் | - 01 |
| | செட்டா மல்டி பிளஷர் யூரிட் | - 01 |
| 98. | மெசின் உதிரிப்பாகங்கள் | - 4 |
| | மெசின் உதிரிப்பாகங்கள் (ஸ்பிரிங் மெசின்) | - 6 |
| | தையல் மெசின் உதிரிப்பாகங்கள் பெகட் | - 17 |
| 99. | நர்மல் றான்ஸ்பியர் ரிபன் | - செட் 6 |
| | டேப் | - 2 |
| 100. | அயன் டிசைன் தொகுதி | - 01 |
| | படம்பிறேம் | - 01 |
| | இமிடேஷன் உபகரணம் | - 01 |
| | சேரமிக் ஷாம்பல் | - 01 |
| | சின்ன ஜொக் | - 01 |
| | மெழுகுதிரி | - 01 |
| | புத்தகம் | - 01 |
| | போசலின் | ஜக் 01 |
| | சேரமிக் சாமான்கள் (1 உடைந்தது) | 04 |
| 101 | நிலம் சுத்தம் செய்யும் கிஸ் | - 24 |
| 102 | பலவிதமான புத்தகம் | - 16 |
| 103. | பலவிதமான புத்தகம் | - 23 |
| 104. | பலவிதமான புத்தகம் | - 11 |
| 105. | தையல் மெசின் உபகரணங்கள் | - 01 தொகுதி |
| 106. | குளியல் அறை உபகரணங்கள் | - 55 |
| 107. | லேசர் ஸ்கேனர் | - 16 |
| 108. | வீடியோ (CD) | - 10 |
| 109. | வீடியோ (CD) | - 10 |
| 110. | வீடியோ (CD) | - 10 |
| 111. | வீடியோ (CD) | - 8 |
| 112. | மேல் டுரினல் | - 1 |
| | லேட்டஸ் ப்ரித்திவ் பேக்ஸ் | - 26 |
| | லேசர் பிரின்டர் | - 02 |
| 113. | மியூசிக் ஜெகட் (சிறுவர்) | - 30 |
| 114. | பாவித்த உடைகள் | 01 தொகுதி |
| 115. | பேயாரிங்ஸ் | - 02 |
| | வாகனம் வால்வ | - 01 |
| | கியர் வீல் | - 02 |
| | வேல்டிங் கூறு பெகட் | - 01 |
| 116. | N' பெல்ட் | 01 தொகுதி |
| | இரும்பு டியூப் | - 01 |
| | செல் பெக்ஸ் வீட் ரோல் | - 06 |
| 117. | மணி பதியும் இயந்திரம் | - 02 |
| 118. | அச்சு உதிரிப்பாகங்கள் | - 01 |
| 119. | தொலைநோக்கி நிறுத்தி | - 01 |
| 120. | பல் வைத்திய உபகரணங்கள் | - 01 தொகுதி |
| . | பல் வைத்திய உபகரணங்கள் | - 10 பெகட் |
| 121. | சிப்ஸ் பெகட் | - 11 |
| 122. | பாவித்த நீள் காற்சட்டைகள் | - 04 |
| | டெனிம் | - 01 |
| | மேஸ் சோடிகள் | - 05 |
| | ஆண் ஆடை | - 19 |
| 123. | லிவ் பிரின்டர் (Sony) | - 01 |
| 124. | IDC கனெக்டர் பெகட் | - 3 |
| | பியூஸ் கன்ரோலர் உரிரிப்பாகங்கள் | - 1 |
| | லெதர் பெல்ட் ஷாம்பல் | - 1 |
| | வாகனத்திற்குரிய பிட் | - 6 |
| | கோபல் சாம்பல் | - 3 |
| 125. | மின்சார வினியோக யூனிட் பாவித்தது | - 06 |
| 126. | பாவித்த உடைகள் 01 தொகுதி | |
| 127. | மின்சார ரெகியூலேட்டர் கவர் | 01 தொகுதி |
| 128. | ஜபமாலை | 01 தொகுதி |
| 129. | ஜபமாலை | 01 தொகுதி |
| 130. | தொலை பேசி வயர் கோட் 01 தொகுதி | |
| 131. | லைனிங் ரோல் | - 01 |
| 132. | கணனி படிப்பு சம்பந்தமான | - 140 |
| 133. | கயிறு ஷாம்பல் (Fiber parts) | - 14<br>- 6 |
| 134 | ஸ்பின் சோகட் உடன் சுவிச் பெகட் | |
| | பிளாஸ்டிக் | - யூனிட் 6 |
| 135. | ரி - சேட் | - 40 |
| 136. | ரி - சேட் | - 20 |
| 137. | பாவித்த உடைகள் 1 தொகுதி | |
| 138. | காற்சட்டை | - 02 |
| | ரிசேட் | - 02 |
| | சேட் | - 2 |
| | சல்வாரி | - 02 |
| | கவுன் | - 01 |
| 139. | பாவித்த உடைகள் | - 15 |
| 140. | நீள் காற்சட்டை | - 2 |
| | சாரம் | - 1 |
| | சல்வாரி | - 1 |
| | பிளவுஸ் | - 1 |
| 141. | சாரி | - 3 |
| | சாரம் | - 1 |
| | பிளவுஸ் | - 3 |
| 142. | உடுப்புக்கள் | - 3 |
| 143. | கடிகாரம் (பெண்) | - 1 |
| | பிளவுஸ் | - 3 |
| | பொம்மைகள் | - 2 |
| 144. | pedo மீட்டர் HJ 720 IT | - 2 |
| 145. | பொம்மைகள் செட் | - 2 |
| | சிறுவர் புத்தகம் | - 2 |
| | ஸ்பிங் கோட் | - 2 |
| 146. | டோய்ஸ் றவுட்டர் | - 01 |
| 147. | பாவித்த வோக்மன் செட் | - 1 |
| 148. | சௌன்ட் காட் | - 01 |
| 149. | ப்லெக்டிபல் ஹோஸ் | - 3 |
| 150. | டேபல் நெட் லொட் | - 1 |
| 151. | சிறுவர் புத்தகம் | - 40 |
| 152. | மருத்துவ புத்தகம் | - 12 |
| 153. | சுற்றாடல் புத்தகம் | - 8 |
| 154. | Fashion book | - 5 |
| | Research book | - 8 |
| 155. | காலநிலை புத்தகம் | -10 |
| 156. | ஆங்கில புத்தகம் | - 4 |
| 157. | உணவு போசன புத்தகம் | - 8 |
| 158. | பலவினப்புத்தகம் | - 70 |
| 159. | கதைப்புத்தகம் | - 15 |
| 160. | கதைப்புத்தகம் | - 15 |
| 161. | பலவினப்புத்தகம் | - 30 |
| 162. | பலவினப்புத்தகம் | - 50 |
| 163. | நூல் ஷாம்பல் காட் | - 6 |
| 164. | பாவித்த உடைகள் | - 58 |
| 165. | பாவித்த உடைகள் | - 24 |
| | பாவித்த சாரி | - 01 |
| 166. | தைத்த ஆடைகள் | - 7 |
| 167. | ஜபமாலை பெகட் | - 22 |
| 168. | தைத்த ஆடைகள் | - 15 |
| 169. | பாவித்த வீடியோ கமரா | - 4 |
| 170. | பாவித்த கமரா | - 20 |
| 171. | எழுதும் புத்தகம் | - 6 |
| | சோக் பெகட் | - 6 |
| | பாடசாலை உபகரணம் | - 16 |
| | விளையாட்டு பொருட்கள் | - 05 |
| 172. | சமையல் அறைசாமான்கள் | - 22 |

| | பொருட்கள் | ஏலவிற்பனை |
|---|---|---|
| 173. | Garments Assessories | - 104 |
| 174. | மெழுகுதிரி | - 1 தொகுதி |
| 175. | வாழ்த்து மடல்கள் | - 250 |
| 176. | வீடியோ கெசட் | - 01 |
| | சிசங்கல் யூனி (LBN) | - 01 |
| 177. | கிண்ணங்கள் | - 12 |
| 178. | இட்டலி செய்யும் உபகரணம் | - 01 |
| | ஜக் | - 1 |
| 179. | பாவித்த சப்பாத்து சோடிகள் | - 30 |
| 180. | தைத்த ஆடைகள் | - 30 |
| 181. | Hot ஜேசி | - 01 |
| | திருமண கோட் | - 02 |
| 182. | கதைப்புத்தகங்கள் தமிழ் | - 23 |
| 183. | பௌத்த புத்தகங்கள் | - 02 |
| 184. | சிங்கள, ஆங்கில அகராதி | - 01 |
| 185. | சாரம் | - 3 |
| | சேட் | - 2 |
| 186. | குழந்தைகள் கவுன் | - 3 |
| | பேபி சூட், | - 2 |
| | தலையாணி | - 4 |

| | பொருட்கள் | ஏலவிற்பனை |
|---|---|---|
| 187. | தைத்த உடைகள் | - 20 |
| 188. | சல்வாரி | - 1 |
| | சாரி | - 2 |
| | லெஸ்ட் | - 2 |
| | பிளவுஸ் | - 4 |
| 184. | சின்ன டீசேட் | - 2 |
| | பேபிகாற்சட்டை | - 2 |
| | பேபி கவுன் | - 2 |
| | பேபி சூட் | - 1 |
| | காற்சட்டை | - 2 |
| 190. | டீசேட் | - 5 |
| | ஆண் உள்ளாடைகள் | - 5 |
| | விளையாட்டு காற்சட்டை | - 2 |
| | சேட் | - 1 |
| | சாரம் | - 1 |
| 191. | ஆண் பெண் சப்பாத்துக்கள் | - 13 |
| 192. | சம்பியன் கரம் போட் | - 01 |
| 193. | பாவித்த ஆடைகள் | - 25 |
| 194. | அச்சடித்த பத்திரங்கள் 20 கி. கி. பைகள் | - 25 KG |
| 195. | அச்சடித்த பத்திரங்கள் 20 கி. கி. பைகள் | - 25 KG |

| | பொருட்கள் | ஏலவிற்பனை |
|---|---|---|
| 196. | அச்சடித்த பத்திரங்கள் 20 கி. கி. பைகள் | - 25 KG |
| 197. | அச்சடித்த பத்திரங்கள் 20 கி. கி. பைகள் | - 25 KG |
| 198. | அச்சடித்த பத்திரங்கள் 20 கி. கி. பைகள் | - 25 KG |
| 199. | அச்சடித்த பத்திரங்கள் 20 கி. கி. பைகள் | - 25 KG |
| 200. | அச்சடித்த பத்திரங்கள் 20 கி. கி. பைகள் | - 25 KG |
| 201. | சில்வர் ஜுவலரி ஷாம்பல் | |
| 202. | மாதிரி கல் 4 பெகட் | |
மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், தெற்கு மாத்தளை, அஸ்கிரி பல்லேசிய பத்துவவில் கவுடுபலல்ல கிராமத்தில் அமைந்துள்ள கந்தவத்த பிரிவின் மஹலெவகந்த என்ற காணிக்கு 1998.06.21 ஆம் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டப்ளியு. டி. தசநாயக்க என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 3424 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 11 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகாக - வடகிழக்கே : 15 ஆம் இலக்க காணித்துண்டும் ; தென்கிழக்கே : 14 ஆம் இலக்க காணித்துண்டும் ; தென்மேற்கே : 12 ஆம் இலக்க காணித்துண்டும் ; வடமேற்கே : 10 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபது பேர்ச்சஸ் களாகும் (0ஏ. 0றூ. 20பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் மாத்தளை காணிப்பதிவு அலுவலகத்தில் B 467/209 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
பொது முகாமையாளர்.

கொழும்பு,
2008 நவெம்பர் 27
12-399

---

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி**

**ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்**

கடன் இலக்கம் : 0500000437

கடனாளியின் முழுப்பெயர் : சுரவீர ஆரச்சிலாகே வசந்த குமார

(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, 2008.06.27 ஆந் திகதிய, 1554 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2008.06.27 ஆந் திகதிய 'லக்பிம', ' ஐலண்ட்' மற்றும் 'தினக்குரல்' பத்திரிகைகளில் பிரசுரமான விதிமுறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும்) தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், இலக்கம் 85, போமலுவ வீதி, வட்டப்புலுவ, கண்டி என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரினால் 2008.12.29 ஆந் திகதி மு. ப. 11.30 மணியிலிருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற்கான (விசேஷட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தாழ் அறிவிக்கப்படுகின்றது.

அடமானப் பத்திரத்தின் கீழ் நாற்பத்தோராயிரத்து எழுநூற்று இருபத்து இரண்டு ரூபா எழுபது சதம் (ரூபா 41,722.70) 2006.01.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்-

1. குறிப்பிட்ட ஆதனப் பிணையின் படி வங்கியால் அறவிட வேண்டிய குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான முப்பத்தையாயிரத்து ஐநூற்று அறுபத்தொன்பது ரூபா தொண்ணூற்று எட்டு சதத்தினையும் (ரூபா 35,569.98) 2006.01.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக ஆறாயிரத்து நூற்று ஐம்பத்து இரண்டு ரூபா எழுபத்து இரண்டு சதத்தினையும் (ரூபா 6,152.72) இதன்படி மொத்தமாக நாற்பத்தோராயிரத்து எழுநூற்று இருபத்து இரண்டு ரூபா எழுபது சதம் (ரூபா 41,722.70) ;
2. குறிப்பிட்ட முப்பத்தையாயிரத்து ஐநூற்று அறுபத்தொன்பது ரூபா தொண்ணூற்று எட்டு சதத்தினையும் (ரூபா 35,569.98) அறவிட வேண்டிய 15.00% வீதமான வருடாந்த வட்டியை 2006.02.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் உள்ள தொகையினை அறவீடு செய்வதற்கும் ;
3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதற்குமாகும்.

**அட்டவணை**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், வடக்கு மாத்தளை வகபனஹ பல்லேசிய பத்துவவில் நாயகும்புர மற்றும் வத்தேகம்மெத்த கிராமங்களில் அமைந்துள்ள குளுபனாவத்த (தெஹிகஹமுலேயாயவின் மிகுதிப்பகுதியான இரிவெலியாய மற்றும் நவ்வெல் கொல்லேயாய, வெவேயாய, வெவேயாயஹேன, உடகெதரஹேன, வெவேயாய, ஹங்கிலி கெதரஹேன என்ற காணிகளின் ஒன்றாக்கம்) என்ற காணிக்கு 1997.02.27 ஆம் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டி. வீரசேகர என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 3683 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 82 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : 235 ஆம் இலக்க காணித்துண்டும் (பாதை) ; கிழக்கே : 81 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 134 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : 83 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினைந்து பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 0றூ. 15பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் மாத்தளை காணிப்பதிவு அலுவலகத்தில் D 415/261 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
பொது முகாமையாளர்.

கொழும்பு,
2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி.
12 - 400

---

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி**

**ஆதனம் விற்பனை சம்பந்தமான அறிவித்தல்**

கடன் இலக்கம் : 0500000735

கடனாளியின் முழுப்பெயர் : பதலவத்தேகெதர காமினி திசாநாயக்க

(இங்கு இதன் பிறகு 'வங்கி' என்று அழைக்கப்படும்) 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினால் இத்துடன் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, 2008.02.23 ஆந் திகதிய, 1539 ஆம் இலக்கத்தினைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2008.06.27 ஆந் திகதிய 'லக்பிம', ' த ஐலண்ட்' மற்றும் 'தினக்குரல்' பத்திரிகைகளில் பிரசுரமான விதிமுறைகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும்) தீர்மானத்தின் பிறகு ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் அந்த பணத்தினைக் கழித்து மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு) கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், இலக்கம் 85, பொமலுவ வீதி, வட்டப்புலுவ, கண்டி என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரினால் 2008.12.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணியிலிருந்து கீழே விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்வதற் கான (விசேஷட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அடமானப் பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து அறுபத்தோராயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்று ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூபா 1,61,823.99) 2006.04.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபி விருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டி யிருப்பதால்-

1. குறிப்பிட்ட ஆதனப் பிணையின் படி வங்கியால் அறவிட வேண்டிய குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐம்பது ரூபா நாற்பத்து நான்கு சதத்தினையும் (ரூபா 1,24,050.44) 2006.04.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக முப்பத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்து மூன்று ரூபா ஐம்பத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 37,773.55) இதன்படி மொத்தமாக ஒரு

இலட்சத்து அறுபத்தோராயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்று ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூபா 1,61,823.99) ;

2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐம்பது ரூபா நாற்பத்து நான்கு சதத்தினையும் (ரூபா 1,24,050.44) அறவிட வேண்டிய 15.90% வீதமான வருடாந்த வட்டியை 2006.05.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் உள்ள தொகையினை அறவீடு செய்வதற்கும் ;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதற்குமாகும்.

**அட்டவணை**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், வகபனஹ உடசிய பத்துவவில் நாஉல பிரதேச சபை எல்லையில் பிலிஹுடுகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள மடுகஹஹின்ன என்ற காணிக்கு 2001.05.20 ஆம் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டப்ளியு. டி. தசநாயக்க என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 5820 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 1 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : அரசாங்க காணியும் பி. ஜி. அபேரத்ன மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான காணியும், பி. ஜி. மாட்டின் சிஞ்ஞோ மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான காணியும் ; கிழக்கே : பி. ஜி. அபேரத்ன மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான காணியும் ; தெற்கே : பிரதானபாதையில் இருந்து வயல்வெலி வரையிலான பாதையும் ; மேற்கே : பி. ஜி. மாட்டின் சிஞ்ஞோ மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான காணியும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இரண்டு றூட்டுகளாகும் (0ஏ. 2றூ. 0பே.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் ஏனைய அனைத்துடன் பாதைக்கான உரிமையும் மாத்தளை காணிப்பதிவு அலுவலகத்தில் D 113/62 என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
பொது முகாமையாளர்.

கொழும்பு,
2008 நவெம்பர் 27.
12-401

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. – பஞ்சிகாவத்தை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு

ஏல விற்பனை அறிவித்தல்

**வசிப்பிடத்திற்கு பொருத்தமான பெறுமதிமிக்க சொத்து ஹாரிஸ் பத்துவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட "கம்பாரபிட்டியேகெதர வத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். பி. எச். தென்னகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1322A** ஆம் இலக்க 22.02.2006 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்டு லொட் 2 என அடையாளமிடப்பட்ட காணித் துண்டும் அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 72.5 பர்ச்சஸ் பரப்பளவானதாகும்.

இவ்வாதனம் டெஸ்மன்ட் அப்பவோ எலன் டெக்ஸ்டர் பர்னான்டோ என்பவர் கடப்பாடுடையவராகவும் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சி யினால் பெறப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்.-** பேராதெனியவிலிருந்து ஹல்லொலுவ வழியாக கட்டுகஸ்தோட்டை பாதையில் சுமார் 1.50 கிலோமீற்றர் தூரம் வந்து இடதுபக்கமாக திரும்பி பரிகம பாதையை அடைந்து சுமார் 01 கிலோமீற்றர் தூரம் பல்லேகம வரை சென்று வலதுபக்கமாக திரும்பி கும்புரேகெதர பாதையில் சுமார் 175 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையின் வலதுபக்கமாக விகாரைக்கு முன்னால் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 05.01.2009 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 19.09.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 08.10.2008 ந் திகதிய "த ஐலண்ட்", "திவயின", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10% ; உள்நாட்டு வரி 1% ; ஏல விற்பனையாளர் கட்டணம் 21/2% ; நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000/- : இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500/- : சகல பகிரங்கப்படுத்தல் செலவு : கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி PLC யில் செலுத்தப்படுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட 90% மீதிப்பணம் 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் செலுத்தப்பட்டுள்ள 10% பணத்தொகை உரிமை இழக்கப்படுவதுடன் மேற்கூறிய சொத்து மீள்விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : பதில் பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்), வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. இலக்கம் எச். என். பி. டவர்ஸ், இல. 479, டீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" தொடர்பு கொள்ளவும். தொலைபேசி : 0112661821, 0112661815.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 83/5 போமலுவ பாதை, வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி : 081-2211025,071-4755974
பெக்ஸ் : 2211025
12-380

---

**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்**

சனச அபிவிருத்தி வங்கி என
அறியப்படும் சனச
டிவலப்மென்ட் பாங்க்
லிமிட்டெட், இல. 106ஈ
தர்மபால மாவத்தை,
கொழும்பு - 06
முறைப்பாட்டாளர்

-எதிர்-

வழக்கு இலக்கம் : 17230/எம். பி.

1. கமுஆரச்சிகே தனுஜா
குமாரி
2. ஹொந்தமுனிகே
பிரேமதிலக
இருவரினதும் வதிவிடம்
இல. 247/எப்
கிறிஸ்டின் பெரேரா
மாவத்தை,
முதியன்சே தோட்டம்,
தலுகம களனி
எதிராளிகள்

ஏல விற்பனை

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், களனி, பேதியகொடையில் அமைந்துள்ள கோன்கஹவத்த எனும் இடத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எச். டபிள்யூ. டி. எஸ் த சில்வா அவர்களுடைய இல. 3735 ஆம் இலக்கமுடைய காணித்துண்டு. ஏல விற்பனை**

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கிலக்கம் 17230/எம். பி. உடைய வழக்கின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள விற்பனைக்கட்டளையின் படி மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 1ம், 2ம் எதிராளிகளினால் முறைப்பாட்டாளர்களுக்கு செலுத்தப்படவேண்டிய ரூபா 808,679.52 பணத்தினையும் ரூபா 700,000.00 பணத்தினையும் 2001.10.04 ஆந் திகதியிலிருந்து முழுப்பணத்தையும் செலுத்தி முடிக்கும் வரை வருடத்திற்கு 19 வீத அளவுடைய அதற்கான வட்டியும் அவ்வட்டிக்கான வியாபார விற்பனை வரியும் மற்றும் பாதுகாப்பு வரியும் அறவிடப்படுவதற்காக மேலே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இடம் 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.30 மணியளவில் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏலவிற்பனையில் விற்கப்படும்.

காணி' பற்றிய விபரம்.- மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரிபத்துவ களனி பிரதேச சபையின், களனி பேலியகொடையில் அமைந்துள்ள கோன்ஹகவத்த எனுமிடத்திற்கு எச். டபிள்யு. டி. எஸ் த சில்வா அதிகாரம் பெற்ற மற்றும் 1997 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதியுடைய வரைபடத்திற்கிணங்க 'ஏ' எனும் காணித்துண்டின் எல்லைகளாவன : வடக்கு : வரைபடம் இல. 1030 இற்கிணங்க இல. 5 மற்றும் 2 காணித்துண்டுகள் ; கிழக்கு : எஸ். ஏ. மிலிநோனா மற்றும் வெல்கமகே முனதாச ஆகியோருக்கு உரித்தான பகுதியும் ; தெற்கு : கும்பல் வாவியும் ; மேற்கு : ஜோசப் பீட்டர், நே. எ. பெரேரா மற்றும் கே. பஸ்நாயக்க ஆகியோருக்கு சொந்தமான இடமும் மற்றும் பாதை புறக்கோட்டை யிலிருந்து கொழும்பு - கண்டி பிரதான பாதையில் 03 கி. மீ. அளவில் வந்ததன் பின்னர் சந்திக்கின்ற பேலியகொட 4 மைல்கல் அருகினால் வலது பக்கமாக திரும்பி பியகம பாதையில் 4 கி. மீ. அளவில் முன்னால் செல்லும் போது சந்திக்கின்ற களனி ரஜமகா விகாரையின் முன்னால் பிரதான பேருந்து நிறுத்துமிடத்திற்கு அருகிலுள்ள பாதையால் வலது பக்கமாக திரும்பி 2 கி. மீ. அளவில் முன்னால் செல்லும் போது இடது பக்கமாக சந்திக்கின்ற வராகொடை வீதியில் 150 மீற்றர் அளவில் முன்னால் செல்லும்போது சந்திக்கின்ற வளைவின் அருகிலுள்ள பாதைக்கு இடதுபக்கமாக 30 மீற்றர் அளவில் சென்றதன் பின்னர் தோட்டத்தினுள் அமைந்துள்ள இடம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** ஏலவிற்பனை முடிவுற்றவுடன். கீழ் குறிப்பிடப்படும் பணம் கொள்வனவு செய்பவரால் ஏல விற்பனை யாளருக்கு அச்சந்தர்ப்பத்திலேயே காசாக கொடுக்கப்படவேண்டும்.

1. கொள்வனவு விலையில் 25% ;
2. நொத்தாரிசு கட்டணம் ரூபா 4,500;
3. எழுதுவினைஞர் மற்றும் கூவலிடுவோர் கட்டணம் ;
4. ஏல விற்பனையாளர் தரகு காசு ;
5. எஞ்சிய பணமாகிய 75% த்தினை 30 நாட்களுக்குள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேலே இலக்கமிடப்பட்ட வழக்கின் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** முகாமையாளர் (கடன் வசூலிப்பு) சனச அபிவிருத்தி வங்கி இல. 106, தர்மபால மாவத்தை, கொழும்பு 06 விலாசத்தில் விசாரிக்கவும். தொலைபேசி இல. 2917137. பெக்ஸ் : 011-2917872.

சிரியானி மனம்பேரி,
நீதிமன்ற ஆணையாளர்,
ஏல விற்பனையாளர்,
தரகர் மற்றும் மதிப்பீட்டாளர்.

இல. 09, பெல்மன்ட் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. 011-2320074
அல்லது
0713-151356
12-376

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2008 இன் இல. 630

டிஐஆர்எப்/ ஆர்ஈசிடி/245/ஏவை.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமரராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற
அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கெடற் உத்தியோகத்தர்கள் 2007, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி முதல் பின்வரும் அட்டவணையின் பிரகாரம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் இரண்டாம் லெப்டினனட் வரிசைப் பதவியில் அதிகாரவணைக்கு நியமனம் செய்தலை அதியுத்தமரராம் சனாதிபதி அவர்கள் அங்கீகரிப்பதில் களிகூர்ந்துள்ளார்கள் :-

சி/56709 கெடெற் உத்தியோகத்தர் அபேவர்தன ஆரச்சி பந்துல திமுது பிரியதர்ஷன
சி/56715 கெடெற் உத்தியோகத்தர் அகலகட தீரப்புலி ஹேவகே மனோஜ் நுவன்
சி/56830 கெடெற் உத்தியோகத்தர் அமில பிரியருவன் நாகஹவத்த
சி/56868 கெடெற் உத்தியோகத்தர் அபேகோன் முதியான்சேலாகே மஹேஷ் ரஞ்சித் அபேரத்ன
சி/56856 கெடெற் உத்தியோகத்தர் அப்பு ஹென்னெதி தொட ஹேவகே நாமல் சமீர
சி/56858 கெடெற் உத்தியோகத்தர் இநோகா நாமலி வீரசிங்க
சி/56864 கெடெற் உத்தியோகத்தர் எதிரிசிங்க முதியான்சேலாகே சதுரானி பந்துமதி தீரசேன
சி/56860 கெடெற் உத்தியோகத்தர் எதிரிசூரி மொஹட்டிகே ஹெலமினி சாமிகா த சேரம்
சி/56707 கெடெற் உத்தியோகத்தர் கம்புலுகலகே ஹசித நிரோமால் சேனாரத்ன
சி/56828 கெடெற் உத்தியோகத்தர் குமாரப்பட்டியகே புத்தி லக்ருவன் பீரிஸ்
சி/56846 கெடெற் உத்தியோகத்தர் கீகனகமகே சமித் மதுரங்க
சி/56859 கெடெற் உத்தியோகத்தர் சாலிந்த ருவன்தி விஜயதிலக
சி/56837 கெடெற் உத்தியோகத்தர் ஜயவர்தன ரால்லாகே நளிந்த சம்பத் ஜயவர்தன
சி/56836 கெடெற் உத்தியோகத்தர் தென்னகோன் முதியான்சேலாகே புஷ்பமால் இந்துநில் சம்பத் தென்னகோன்
சி/56838 கெடெற் உத்தியோகத்தர் தென்னகோன் முதியான்சேலாகே நுவன் தனஞ்ஜய தென்னகோன்
சி/56852 கெடெற் உத்தியோகத்தர் தென்னகோன் முதியான்சேலாகே மதுர பாஷன தென்னகோன்
சி/56849 கெடெற் உத்தியோகத்தர் தமித் திமுது ரணவக
சி/56835 கெடெற் உத்தியோகத்தர் நாணயக்கார பல்லகே மாலக லக்சான்
சி/56857 கெடெற் உத்தியோகத்தர் பமுனு ஆரச்சி பதிரென்னெஹலாகே சயனி மஞ்சுலா ஜயசேகர
சி/56844 கெடெற் உத்தியோகத்தர் பண்டாரநாயக முதியான்சேலாகே பிரியன்த மஞ்சுல பண்டாரநாயக
சி/56851 கெடெற் உத்தியோகத்தர் பஸ்நாயக முதியான்சேலாகே மெவன் சாரங்க பஸ்நாயக
சி/56847 கெடெற் உத்தியோகத்தர் மதுரப்பெரும ஆரச்சிகே ஹசித லக்மால் மதுரப்பெரும
சி/56848 கெடெற் உத்தியோகத்தர் மல்கொடுவே கெதர எரன்த மனோஜ் அபேகோன்
சி/56827 கெடெற் உத்தியோகத்தர் யடிவெல கோராலலாகே நவின் பண்டார யடிவெல்ல
சி/56826 கெடெற் உத்தியோகத்தர் யாபா அப்புஹாமிலாகே சுபுன் நவோதன யாபா
சி/56825 கெடெற் உத்தியோகத்தர் லமாஹேவாகே சபித் ஹசான் த சில்வா
சி/56867 கெடெற் உத்தியோகத்தர் லியதிபிட அப்புஹாமி முதியான்சேலாகே துமிந்த தினேஷ் லியதிபிட
சி/56845 கெடெற் உத்தியோகத்தர் லியனகே மனுக திலிப் பெரேரா
சி/56862 கெடெற் உத்தியோகத்தர் விஜேசிங்க ஆரச்சிகே நதீரா உதய குமாரி விஜேசிங்க
சி/56708 கெடெற் உத்தியோகத்தர் விதாரனகே தொன் தினேஷ் சயான் விதாரன
சி/56853 கெடெற் உத்தியோகத்தர் விதாரனகே தொன் நாலக சமிந்த குலதிலக
சி/56850 கெடெற் உத்தியோகத்தர் விஜேகோன் ரால்லாகே அர்ஜுன பண்டார விஜேகோன்
சி/56865 கெடெற் உத்தியோகத்தர் வீரகோன் வலவ்வே வின்த்யா சுபேஷலா குமாரிஹாமி வீரகோன்
சி/56834 கெடெற் உத்தியோகத்தர் வீரசிங்க விதானலாகே சந்துன் மஹேஷ் வீரசிங்க
சி/56831 கெடெற் உத்தியோகத்தர் ஸ்வர்னசிங்க நவரத்னதிலக ஆபரண முஹந்திரம்லாகே சமன் பிரியசாந்த
சி/56842 கெடெற் உத்தியோகத்தர் சஞ்ஜீவ மதுரங்க கோட்டகொட
சி/56835 கெடெற் உத்தியோகத்தர் சமரகோன் முதியான்சேலாகே ஜனக அபயரத்ன சமரகோன்
சி/56840 கெடெற் உத்தியோகத்தர் சமரவிக்ரம ஜாசிங்கே திமுது சந்தருவன்
சி/56841 கெடெற் உத்தியோகத்தர் சுனெத் சயான் சமரநாயக
சி/56854 கெடெற் உத்தியோகத்தர் சூரிய ஆரச்சி முதியான்சேலாகே சானக லசந்த சந்திரசேன
சி/56863 கெடெற் உத்தியோகத்தர் செனரத் பதிரனகே நிமாலி நில்மினி செனரத்
சி/56843 கெடெற் உத்தியோகத்தர் ஹதுவலலாகே தொன் கோசல கீத் குப்த குமாரசிறி
சி/56839 கெடெற் உத்தியோகத்தர் ஹிடிஹாமி முதியான்சேலாகே லஹிரு பிரபாகர
சி/56730 கெடெற் உத்தியோகத்தர் ஹித்தெடிய லோககமகே தொன் சயான் பிரசங்க சேனாரத்ன
சி/56728 கெடெற் உத்தியோகத்தர் ஹேவா கொண்டாரமகே சந்துன் ஸ்ரீ திலன்த
சி/56833 கெடெற் உத்தியோகத்தர் ஹேரத் முதியான்சேலாகே சுதர்ஷ சேனாதீர ஹேரத்
சி/56861 கெடெற் உத்தியோகத்தர் ஹெனரத் ஹெட்டி ஆரச்சிகே தோன ஜினாரி நதீசானி
சி/56866 கெடெற் உத்தியோகத்தர் லமாஹேவாகே ஹேசான் பத்ம ஹர்ஷ பெரேரா

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டபீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2008, நவெம்பர் 05.
12-402

---

2008 இன் இல. 631

டீவீஎவ்/ ஆர்ஈசீர்/ 51/ஏவை.

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும், உள்ளடக்குதலும்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர்கள் 2005 யூன் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்டுள்ள சிரேஷ்டத் தன்மையின் பிரகாரம் இலங்கை தரைப்படை தொண்டர் படையின் இரண்டாம் லெப்டினனட் வரிசைப் பதவி அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அன்றிலிருந்து இலங்கை மின் இயந்திர பொறியியல் ரெஜிமெண்ட் (தொண்டர்) இடம் உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) கெடெற் உத்தியோகத்தர் பஹல கப்புராலலாகே இந்திக்க ஜகத் திசாநாயக்க, இலங்கை சிங்க ரெஜிமெண்ட் (தொண்டர்)
(ஆ) கெடெற் உத்தியோகத்தர் ஹெட்டிஆரச்சிகே மஹேஸ் பிரபாத், இலங்கை பொறிநியல் ரெஜிமெண்ட் (தொண்டர்)
(இ) கெடெற் உத்தியோகத்தர் தலுவத்தகே சமிந்த ரத்நாயக்க, கமுனு வீரர் படையணி (தொண்டர்)
(ஈ) கெடெற் உத்தியோகத்தர் குடாமானனகே ஜனித் ருவன் சஞ்சீவ பெரேரா, விஜேபாகு கலாட்படை ரெஜிமெண்ட் (தொண்டர்)
(உ) கெடெற் உத்தியோகத்தர் வர்ணகுலசூரிய போரதொட்டகே ஜெஸ்மின் நலிந்த பிரணாந்து , இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
(ஊ) கெடெற் உத்தியோகத்தர் அலங்கார கெதர சயான் கிரிசாந்த தர்மசேன, இலங்கை முன்னோடிப் படையணி
(எ) கெடெற் உத்தியோகத்தர் மிகெல் ஆரச்சிகே புதிது பிரியங்கர சில்வா, இலங்கை சைகை படையணி (தொண்டர்)
(ஏ) கெடெற் உத்தியோகத்தர் தென்னகோன் முதியன்சேலாகே வசந்த குமார அபேசிங்க, கஜபா ரெஜிமெண்ட் (தொண்டர்)
(ஐ) கெடெற் உத்தியோகத்தர் ஐசேந்து லியனகே அசங்க உதய அபேரத்ன, விஜயபாகு காற்படை ரெஜிமெண்ட் (தொண்டர்)
(ஒ) கெடெற் உத்தியோகத்தர் உயன ஹேவகே சங்கீத் லசந்த, கஜபா ரெஜிமெண்ட் (தொண்டர்)
(ஓ) கெடெற் உத்தியோகத்தர் முனுகொட ஹேவகே தரங்க சிரிவர்தன, இலங்கை தரைப்படை பொது சேவை படையணி (தொண்டர்)
(ஔ) கெடெற் உத்தியோகத்தர் அமரசிங்க ஆரச்சி அப்புஹாமிலாகே விஜே வீர அமரசிங்க, இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணி (தொண்டர்)

(க) கெடெற் உத்தியோகத்தர் திசாநாயக்க முதியன்சேலாகே சாரங்க கனிஷ்ட திசாநாயக்க, இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணி
(ங) கெடெற் உத்தியோகத்தர் பிரான்கி கன்கானம்லாகே சமிந்த விஜேரத்ன, இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
(ச) கெடெற் உத்தியோகத்தர் கோனார முதியன்சேலாகே ஜயந்த கோனார, இலங்க்க சிங்க ரெஜிமெண்ட் (தொண்டர்)
(ஞ) கெடெற் உத்தியோகத்தர் பஹல வலவ்வே மஹேந்திர பண்டார அபேதிலக்க, இலங்கை தேசிய பாதுகாப்பு படையணி
(ட) கெடெற் உத்தியோகத்தர் தனுக்க ரணசிங்க குணசேக்கர, இலங்கைத் தரைப்படை சேவை படையணி
(ண) கெடெற் உத்தியோகத்தர் பத்திரன்னஹலாகே ஓலித்த விராஜ் குமார பத்திரண, இலங்கை தேசியப் பாதுகாப்பு படையணி
(த) கெடெற் உத்தியோகத்தர் சுபசிங்க நிஸ்ஸங்க அமில பிரியதர்ஷன டயஸ், இலங்கை சிங்க ரெஜிமெண்ட் (தொண்டர்)
(ந) கெடெற் உத்தியோகத்தர் அலுத் கமராலலாகே சமில பிரியதர்ஷண, விஜயபாகு காற்படை ரெஜிமெண்ட் (தொண்டர்)
(ப) கெடெற் உத்தியோகத்தர் தம்புரே லியனகே நந்த டயஸ், இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணி
(ம) கெடெற் உத்தியோகத்தர் ஹும்பிட்ட கமரலலாகே காலிந்த ஹர்ஷ குணரத்ன, இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணி
(ய) கெடெற் உத்தியோகத்தர் மல்லவ தந்திரிகெ ஹிரந்த பிரசாத் பெரேரா, இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணி
(ர) கெடெற் உத்தியோகத்தர் வலாகுலுகே தொன் சமிர பிரசாத் அபேவிக்கிரம, இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணி
(ல) கெடெற் உத்தியோகத்தர் புஞ்சி ஹேவகே துஷார நிரோஷன், இலங்கை தேசிய பாதுகாப்புப் படையணி.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, திசெம்பர் 26.
12-305

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்

25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கக் கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ், அதற்கான அட்டவணையில் உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்க சபை உத்தேசித்துள்ளது.

2. ஆதலின் சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25(1), 26(1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். டபிள்யூ. குணதாச,
செயலாளர்,
கடன் இணக்கச் சபைத் திணைக்களம்.

கடன் இணக்க சபைத் திணைக்களம்,
இல. 428/11, வீர டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2008.11.18.

### அட்டவணை

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (1) 41025 | திரு. வீரசூரிய ஆரச்சில்லாகே காமினி சந்திரதிலக பொல்கொட்டுவ, கும்புக்கொட்டுவ, ஹக்கஹின்ன. | திரு. வீரசூரிய ஆரச்சில்லாகே ரணவீர, கும்புக்கொட்டுவ, ஹக்கஹின்ன. |
| (2) 41058 | திரு. சுமித் நானாயக்கார, இல. 340, கமகெதர, பகல கந்துருமுகவ, தியதலாவ. | திரு. திசாநாயக்க முதியன்சேலாகே காமினி திசாநாயக்க, "சிசிகிரண", பதுளை வீதி, அட்டம்பிட்டிய. |
| (3) 40969 | திரு. மனுகுலசூரியகே துஷார, இல. 504/204, கங்கே யாய, கோட்டபிட்டிய, பகமுண. | திருமதி எச். கே. ஶ்ரீயாலதா, 32 ஆம் மைல் கட்டை அருகே, அல்ஹேன, நாலந்த. |
| (4) 41076 | திருமதி லங்காஹலுகே ருவந்திகா பிரியதர்ஷனீ, இல. 845, தும்பேலிய, ஜா-எல. | திரு. ஜயவீர முதியன்சேலாகே காமினி அனஸ்கிறீடஸ், இல. 850/B, தும்பேலிய, ஜா-எல. |
| (5) 41079 | திருமதி மஞ்சநாயக்க ஜயவர்தன முதலிகே தோன சுனில் சுவர்ணா ஜயவர்தன, இல. 310/6, இகல பியன்வில, கடவத்தை. | திருமதி மதன் ஆராச்சிகே ஶ்ரீமதீ, இல. 95/4, கொஸ்ஸின்ன, கனேமுல்ல. |

12-301

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## றுஹுண அபிவிருத்தி வங்கி - அம்பலன்கொட கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின்கீழ் றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழும் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கும் இணங்க உருவாக்கப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கிக்குச் சாட்டப்பட்ட அதிகாரத்தின்படியும், 2008.09.25 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுண அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்திலே கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுண அபிவிருத்தி வங்கியின் பெயரில் பிரசித்திபெற்ற சட்டத்தரணியும், நொத்தாரிசுமான திரு. எஸ். ஈ. முணசிங்ஹ அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999.05.04 ஆந் திகதிய இலக்கம் 2370 எனும் ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல் மாத்தறை வீதி, தங்காலை, கொயம்பொக்க எனும் முகவரியில் வசிக்கும் சனத் ரோய் குமுது முதுமால என்போரினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ்வீட்டுமுறியின் கீழ் மூன்று இலட்சத்து தொண்ணூற்றேழாயிரம் ரூபாவுக்கான (ரூ. 3,97,000) பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தவேண்டி யிருப்பதாகவும், 2008.08.27 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 19.5 வீதப்படி மூன்று இலட்சத்து தொண்ணூற்றேழாயிரம் ரூபாவுக்கான (ரூ. 3,97,000) பணம் ஏலவிற்பனைத் திகதியிலிருந்து வட்டியும் சேர்த்து இன்னும் ஏலவிற்பனைச் செலவும், வேறு செலவுகள் இருப்பின் அவற்றையும் சேர்த்து அப்பணத்தை அறவிட்டுக் கொள்ளும் பொருட்டு மாத்தறை உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 2370 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிட வேண்டியுள்ளதும் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே தென் கிருவாபத்துவையில் குடாவெல்லயில் அமைந்துள்ள - வடக்கே : ஆகிரிஸ்கே வத்த ; கிழக்கே : மதெஸ்ஹாமி வசிக்கும் தோட்டம் ; தெற்கே மற்றும் மேற்கே : ஓலோத்துவ/தற்போதைக்கு எல்லையாகவுள்ள குரக்கன் சேரு அளவுள்ள ஒரு றூட் பத்து தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 10.5பே.) கொண்ட மிகப்பெரிய வெல்லத்தர கொரடுவ/வெல்லத்தர எனும் ஹேமசிரி சிரிபத்தன என்ற அதிகாரம்பெற்ற அளவையாளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட 1999.04.06 ஆந் திகதிய 1376 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டியவாறு காணியில் உள்ள அனைத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள், நிலம் உட்பட அனைத்துமாகும்.

இது தங்காலை காணிப்பதிவு அலுவலகத்தில் எப். 200/195 இன் கீழ் 1999.05.10 ஆம் திகதி பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

அமரசேன பிரதாபசிங்ஹ,
பொது முகாமையாளர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.
12-274

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"மாங் ஹவுசிங் (பிரைவட்) லிமிட்டெட் " ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2005.05.03 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "மாங் ஹவுசிங் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "மாங் ஹவுசிங் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி யானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப் படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி.

என். (பீவீஎஸ்) 41497.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008 நவெம்பர் 19.
12-275

## மக்கள் வங்கி – மினுவாங்கொடை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் 27.06.2008 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மிஹிந்துகுலசூரிய விபத்தகே சார்ள்ஸ் ஜஸ்டின் பெர்னாண்டோ மக்கள் வங்கியின் சார்பில் கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. எல். விஜயசிறிவர்தன அத்தாட்சிப்படுத்திய 28.04.2005 ஆந் திகதி கொண்ட 10060 ஆம் 10059 ஆம் இலக்க முறிகள்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது மேற்படி முறிகளின்மீது ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 500,000) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் மேற்படி ஐந்து இலட்சம் ரூபாவையும் (ரூபா 500,000) ஐந்து இலட்சம் ரூபா மீது (ரூபா 500,000) 01.07.2007 முதல் விற்பனைத் திகதி வரை 18.25 சதவீதப்படி மேலும் வட்டியையும் ஐந்து இலட்சம் ரூபாமீது (ரூபா 500,000) 01.05.2008 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 18.25 சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனை செலவுகளையும் மேற்படி மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ (29L) என்னும் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலதான பணங்களையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 10060 ஆம், 10059 ஆம் இலக்க முறிகள்மீது மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, தாசிய பற்று பன்சில்கொடயில் அமைந்துள்ளதும் கோன்கஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டப்ளியூ. டீ. என் செனவிரத்ன தயாரித்த உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஏ. பி. அமரசிங்க அத்தாட்சிப்படுத்திய 10.12.1995 ஆந் திகதிகொண்ட 2860 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு "4A" என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து இதற்கு எல்லைகளாக : வடக்கில் : எல மற்றும் வயல் ; கிழக்கில் : துண்டு 4B; தெற்கில் : துண்டு 3 மற்றும் பிரதேச சபை வீதி ; மேற்கில் : யூ. எல். பியசேனவின் காணி. என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இரண்டு றூட் பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ.02றூ. 15பே.) இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 899/122 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி வரைபடத்தில் காட்டப்படும் வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியின்மீதான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்,
மேற்கு வலயம் III.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹார,
முதுன்கொட.
12-342

## மக்கள் வங்கி – அம்பாறை 015

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் பிரகாரம் கீழ்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2007.01.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கல்முனை பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். ஏ. கபூர் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, வைகாசி மாதம் 25 ஆந் திகதியும் 2543 ஆம் இலக்கமுடைய ஈட்டுமுறியின் பிரகாரம் (1) ஹேரத் முதியன்சேலாகே சந்திரரத்ன (2) ஹிடிஹாமி முதியன்சேலாகே ஹீன்மெனிகே ஆகிய இருவரும் கட்டணத்தைச் செலுத்தத் தவறியதால் ஈட்டுமுறியின் மீது தற்போதுள்ள கடனுக்காக (ரூபா 96,733.95) தொண்ணூற்றி ஆறாயிரத்து எழுநூற்றி முப்பத்திமூன்று ரூபா தொண்ணூற்றி ஐந்து சதம் மீது 2006.08.23 ஆந் திகதி முதல் 18.25 சத விகிதப்படி வட்டியுடன் ஏலவிற்பனைச் செலவையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29L) எனும் பிரிவின் கீழ் சொல்லப்பட்ட கல்முனை பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். ஏ. கபூர் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2543 ஆம் இலக்க ஈட்டுமுறியில் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் மட்டக்களப்பு எனும் முகவரியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திசவீரசிங்கி அவர்களால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படவேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானித்துள்ளது."

### ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரணம்

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அம்பாறை காணிப் பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட வெவ்கம்பற்று (வடக்கு) அம்பகஹாவெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் 7பீ கிராமத்தில் அமைந்துள்ளதும் வடக்கு : வாய்கால் வீதி ; கிழக்கு : கால் வாய்காலுக்குரிய அரசகாணி ; தெற்கு : 7 பீ/161 ம் இலக்கமுடைய மேட்டுப் பூமியும் ; மேற்கு : கால் வாய்காலுக்குரிய அரசகாணியும் எல்லைகளைக் கொண்ட ஒரு ஏக்கர் (01ஏ.0றூ.0பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதில் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடங்கள் ஆகிய அனைத்தும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
அம்பாறை.

பிரதேச தலைமை அலுவலகம்,
அமரதுங்க கட்டிடம்,
டீ. எஸ். சேனாநாயக்க வீதி,
அம்பாறை.
12-343

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"ஸ்மாட் கேஷ் லங்கா (பிரைவட்) லிமிட்டெட் " ஐ நீக்கிவிடுவதற்கான

394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2004.06.01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஸ்மாட் கேஷ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஸ்மாட் கேஷ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம்

காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மாஅதிபதி.

என். (பீவீஎஸ்) 37732,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008 நவெம்பர் 19.

12-276

---

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2008.03.31 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"பமுனு ஹெந்தர முதியான்சேலாகே அதுல, ஏக்கநாயக்க முதியான்சேலாகே விமலாவதி மற்றும் பமுனு ஹெந்தர முதியான்சேலாகே ஜயதிலக்க பண்டார என்போர், மக்கள் வங்கியின் சார்பில் நுவரெலியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஹேவா பத்தினிகே தயானந்த நாணயக்கார என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.06.29 ஆந் திகதிய 2309 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியாக உள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால், சொல்லப்பட்ட முறியின்மீது ஆறு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்றிப்பதினெட்டு ரூபா (ரூ. 6,68,718) கொண்ட தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது. சொல்லப்பட்ட ஆறு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்றிப்பதினெட்டு ரூபா (ரூ. 6,68,718) கொண்ட தொகை மீது 2007.10.17 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 20.5 வீதப்படியான மேலதிக வட்டியையும் சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் என்னும் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான செலவு தொகைகளையும் பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 2309 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கி பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரியத்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலே பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவினுள், றம்பொடக் கோறளையில், குடாஓயா கிராம அலுவலர் பிரிவினுள், குடாஓயாக் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்டு அவரது கட்டுக்காப்பிலுள்ள மு. பி. நு. 1019 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 21 மற்றும் காணித்துண்டம் 29 என்று அடையாளமிடப்பட்டதும், 'குடா ஓயா வத்த' எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அரச காணியை அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு :- காணித்துண்டம் இல. 21 : வடக்கில்: மு. பி. நு. 1019 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் இல. 19 ; கிழக்கில் : மு. பி. நு. 1019 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள பாதை ; தெற்கில் : மு. பி. நு. 1019 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள பாதை ; மேற்கில் : மு. பி. நு. 1019 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் இல. 20. காணித்துண்டம் 29 : வடக்கில் : காணித்துண்டம் இல. 19 ; கிழக்கில் : பாதை ; தெற்கில் : காணித்துண்டம் இல. 28 ; மேற்கில் : காணித்துண்டம் இல. 30 பரப்பளவில் இது, அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பூச்சியம் தசம் மூன்று ஏழு நான்கு ஹெக்டேயர்களை (0.374ஹெக்.) கொண்டுள்ளது. இக்காணி நுவரெலியாக் காணிப் பதிவகத்தில் கொ 08/8516/2000 என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
நுவரெலியா.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 40, பார்க் வீதி,
நுவரெலியா.

12-346

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. (பதிவு இலக்கம் பிகியு 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இலக்கம் : 1426559901

கடன் கணக்கு இலக்கம் : 203851 - தக்சலா அர்ஜீவ சந்திரசிரி எலமுல்ல

31.07.2008 ஆந் திகதியன்று கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. பணிப்பாளர்கள் கூட்டமொன்றில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

"கடன் எடுத்த தக்சலா அர்ஜீவ சந்திரசிரி எலமுல்ல என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு. பி. எல். விக்ரமசிங்கவின் 30.03.2001 திகதியுடைய முறி இலக்கம் 5444 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். பி. எஸ். ஜயவீரவின் 03.08.2004 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 406 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. இற்கு 2008.05.14 ஆந் திகதிவரை ரூபா 9,49,059 வருமதியாக உள்ளதாலும அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. பணிப்பாளர்கள் சபையினால் 1990 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 04 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் பிரகாரம் அளித்துள்ள அதிகாரத்தின் கீழ் மேற்படி முறிகள் இலக்கங்கள் 5444 மற்றும் 406 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 9,49,059 உடன் ரூபா 2,66,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக 15.05.2008 ஆந் திகதி முதல் ஏலத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 30% சதவீத வட்டியுடன் ரூபா 4,85,878 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 32% சதவீத வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக (பணம் செலுத்தியபின் கழித்து) கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 99 இல் உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து, ஏலகம கோரளையில் கடுவெல பிரதேச சபை எல்லையில் பால பூம்பிரிய கிராமத்தில் அமைந்துள்ள துண் அவுல் மில்லகாவத்த என்ற காணியின் நிலஅளவையாளர் எம். ஏ. ஜயரத்னவின் 1995.05.18 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1030 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் இலக்கம் 4 இக்காணியின் எல்லைகள் வடகிழக்கு,: பிரதான வீதி; தென் கிழக்கு: பிசி எலமுல்லவின் காணி ; தென்மேற்கு : வரைபடம் இலக்கம் 1030 இல் லொட் 3 மற்றும்; வடமேற்கு: லொட் ஆர் (பாதை) இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 1030 படி இக்காணி ஹோமாகமை காணிப் பதிவகத்தில் ஜி1278/32 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

12-358

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

2008.08.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

"பிரசித்த நொத்தாரிசு எட்மன்ற் குலரத்ன அத்தாட்சிப்படுத்திய 2007.08.03 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 11734 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். கே. எஸ். எம். ரத்நாயக்க அத்தாட்சிப்படுத்திய 2006.08.08 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1127 ஆகியவற்றின் பேரில் பமுன கொட்டுவ கினிமான்ன, கேஷானி என்ஜினியர்ஸின் உரிமையாளர் திரு. வணிகசிங்ஹ முதியான்சேலாகே துஷ்மன்த அஞ்சன குமார வணிகசிங்ஹ என்பவரிடமிருந்து முதலும் 2008.06.02 வரை வட்டியும் நான்கு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று எட்டு ரூபா பதினொரு சதங்களும் (ரூ. 4,42,598.11) மற்றும் பத்தொன்பது இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று தொண்ணூறு ரூபா முப்பத்து ஐந்து சதங்களும் (ரூ. 19,10,590.35) அத்துடன் மூன்று இலட்சத்து எண்பத்தோராயிரத்து எந்நூற்று மூன்று ரூபா ஐம்பத்தாறு சதங்களிலும் (ரூ. 3,81,803.56) மற்றும் பதினேழு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்தாறு ரூபாய்களில் (ரூ. 17,77,776.00) ஆண்டுக்கு 28.50% மற்றும் 13% வீதத்தில் 2008.06.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட '1' இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இல. 1127 மற்றும் 11734 ஆகியவற்றால் காப்பளித்து ஈடுவைத்த சொத்தை விற்பதற்கு இல. 24, டொறிங்டன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வெல்கம்பற்று கோரளை தேவமெதி ஹத்பற்றுவில் வாரியபொல பிரதேச சபை எல்லைகளுள் கினிமான்ன கிராமத்தில் அமைந்த 'கொடஹேன்யாய' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். விஜேதுங்க தயாரித்த 2001, சனவரி 7 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1224 இல் விபரித்த துண்டு 14 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : கட்டுபொத்தயிலிருந்து மஹகெலிய வரை பிடபிள்யூடி ரோட்டும் ; கிழக்கில் : துண்டுகள் 15 மற்றும் 16 உம்; தெற்கில் : துண்டு 18 உம் ; மேற்கில் : துண்டு 13 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1224 இன் படி பதினைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப் பதிவகத்தில் D1260/61 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கினிமான்ன கிராமத்தில் அமைந்த 'கொடஹேன்யாய' என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1224 இல் விபரித்த துண்டு 15 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : கட்டுபொத்தயிலிருந்து மஹகெலிய வரை பிடபிள்யூடி ரோட்டும் ; கிழக்கில் : பிரதேச சபை ரோட்டும் ; தெற்கில் : துண்டு 16 உம் ; மேற்கில் : துண்டு 14 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1224 இன் படி பத்து தசம் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10.8பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப் பதிவகத்தில் D1260/60 இல் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1224 இல் துண்டுகள் 8. 59 மற்றும் 65 என அடையாளமிட்ட பாதை ஒதுக்கங்கள் மீதான வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

ஏ. ஜயவர்தன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
குளியாபிட்டிய கிளை.

12-388

---

**இ. அ. நி. கூ. வங்கி**

*(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)*
*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"(இதனகத்துப் பின்னர் "கம்பனி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), மாபிம, பியகம வீதியிலுள்ள 223/2 ஆம் இலக்கத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதுமான ஹோட்டல் மாபிம விலேஜ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், மற்றும் மள்ளிக்காராச்சிகே கிளாரன்ஸ் துஷார பெரேரா என்வர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ. எஸ். கனேகொட என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2006, யூலை 14 ஆந் தேதிய 435 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறியின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவு களைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் மேற்கூறப்பட்ட 435 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது 2008, ஓகத்து 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக இரண்டு கோடி இருபத்தொன்பது இலட்சத்து முப்பதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 2,29,30,695.22) கொண்ட தொகையும் 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடி எண்பத்து நான்கு இலட்சத்து முப்பதாயிரத்து எந்நூற்று பதின்மூன்று ரூபா எழுபத்து இரண்டு சதம் (ரூ. 1,84,30,813.72) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியும் சொல்லப்பட்ட கம்பனியிடமிருந்தும் மள்ளிகாராச்சிகே கிராளன்ஸ் துஷார பெரேரா என்பவரிடமிருந்தும் வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப் பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும், வளவுகளையும், விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இரண்டு கோடி இருபத்தொன்பது இலட்சத்து முப்பதாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 2,29,30,695.22) கொண்ட தொகையை, 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு கோடி எண்பத்து நான்கு இலட்சத்து முப்பதாயிரத்து எந்நூற்று பதின்மூன்று ரூபா எழுபத்து இரண்டு சதம் (ரூ. 1,84,30,813.72) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல் யூலை ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஆறு தசம் ஐந்து சதவீத (6.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 435 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டு முறிமூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர் சொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**435 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டங்களிலுள்ள சியன கோறளையின் அதிகாரிபத்துவில் பியகம பிரதேச சபை எல்லைகளினுள் (உப அலுவலகம் தெல்கொட) மாபிம கிராமத்தில் அமைந்துள்ளதும், 163 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் வேறெல்லாவற்றுடனும் என எஹலகஹாஓவிட்ட எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003, பெப்புருவரி 19 ஆந் திகதிய 384/2003 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துகாட்டப்பட்டதும், காணித்துண்டு வை என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் வை பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : 283/2002 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ×1 உம், 182/2002 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டும் ×2/2 உம் ; கிழக்கில் : வயலும் (ஏபீஃ) மற்றும் அதே காணியின் எஞ்சியுள்ள பாகமும் ; தெற்கில் : பியகம வீதியும், அதே காணியின் எஞ்சியுள்ள பாகமும், கேஏடீ சுனிலாவின் காணியும், மற்றும் ; மேற்கில் : மாபிம வீதியும், கேஏடீ சுனிலாவின் காணியும், பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 384/2003 ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று றூட் மூன்று தசம் சைபர் ஐந்து பேர்ச்சஸ்களை (0ஏ. 3றூ. 3.05பே.) கொண்டுள்ளதுடன் கம்பஹா காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

12-391/1

---

**இ. அ. நி. கூ. வங்கி**

*(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)*
*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

